# <u>ADM COURT, SANKARANKOVIL</u>

**தேதி 20.06.2023**

**அசல் வழக்கு எண். 154/2013**

**<u>பி.வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கில் கண்ட 1ம் பிரதிவாதி மீன்ராஜ் எனது சகோதரர் என்றாலும், 2ம் பிரதிவாதி தன்ராஜ் எனது தந்தை என்றாலும் சரிதான். தாவா சர்வே எண்.545/1ஏ 2 ன் மொத்த விஸ்தீரணம் 5 சென்ட் என்றால் சரிதான். அந்த 5 சென்ட் இடம் ஆதியில் எங்கள் கிராமத்தை சேர்ந்த சங்கரன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த 5 சென்ட்டில் மேல்புறம் 2 1/2 சென்டை எனது தகப்பனாரான 2ம் பிரதிவாதி ஒரு கைத்தடி பத்திரம் மூலமாக கிரையம் வாங்கியதாக நாங்கள் எங்கள் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். என் தந்தை கிரையம் வாங்கியதாக சொல்லும் கைத்தடி பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எங்கள் வீட்டிற்கு வெள்ளையடித்த போது அந்த பத்திரம் கை தவறுதலாக தொலைந்துவிட்டது அதனால் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் எனது தந்தை கிரையம் பெற்றதாக சொல்லும் கைத்தடி பத்திரம் வீட்டிற்கு வெள்ளையடித்தபோது தொலைந்துவிட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தந்தை எந்த ஆண்டு கைத்தடி பத்திரம் மூலம் கிரையம் பெற்றார் என்று எனக்கு தெரியுமா என்றால் எனது தந்தை கிரையம் பெற்று 43 வருடம் ஆகிறது. எந்த ஆண்டு கைத்தடி பத்திரம் தொலைந்துவிட்டது என்று சொல்லமுடியுமா என்றால் சொல்லஇயலாது.

2. 1ம் தபசில் சொத்தின் மேல்புறம் 2 1/2 சென்டுக்கு எங்கள்பெயரில் பட்டா மாற்றம் செய்யக்கோரி வருவாய்துறையினரிடம் மனு கொடுத்தோமா என்றால் இல்லை. எனது

தந்தை கிரயம் பெற்றதாக சொல்லும் 2 1/2 செண்டில் எந்த ஆண்டில் வீடு கட்டினோம் என்றால் ஏற்கனவே இருந்த ஓடு வீட்டை இடித்துவிட்டு 1990 ம் வருடவாக்கில் காரைவீடு கட்டினோம். எங்களுக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லும் சங்கரன்தான் வாதியின் தகப்பனார் என்றால் சரிதான். சங்கரனுக்கு வாதியும், மற்றும் இரு பெண்களும் மட்டுமே வாரிசு என்றால் சரிதான். சங்கரன் 2002 ம் ஆண்டில் இறந்துவிட்டார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சங்கரன் உயிருடன் இருந்த காலம்வரையில் நானோ, எனது தந்தையோ எனது தந்தை கிரையம் பெற்றதாக சொல்லும் இடத்தை பொறுத்து பதிவு கிரையம் ஆவணம் எழுதிக்கொடுக்கும்படி சங்கரனிடம் கேட்டோமா என்றால் எனது தந்தை கேட்டிருப்பார் நான் கேட்கவில்லை. சங்கரன் இறந்த பிறகாவது நானோ, எனது தந்தையோ சங்கரனின் மகள்களிடம் சொத்தை பொறுத்து பதிவு கிரையம் எழுதிக் கொடுக்கும்படி அறிவிப்பு வழங்கினோமா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.7 வீட்டுவரி ரசீதுகள் அனைத்தும் 2010 ம் ஆண்டுக்கு பிறகே உள்ளது என்றாலும், 2010 ம் ஆண்டுக்கு முன்பு தீர்வை செலுத்தியதற்கான ரசீதுகளை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். பழைய ரசீதுகள் தொலைந்துவிட்டது. எந்த ஆண்டிலிருந்து நாங்கள் தீர்வை கட்டி வருகிறோம் என்றால் எனதுதந்தை கிரையம் வாங்கிய ஆண்டிலிருந்தே நாங்கள் தீர்வை செலுத்தி வருகிறோம். பி.வா.சா,ஆ.-6 மின் கட்டண ரசீதுகளும், பி.வா.சா.ஆ.7 குடிநீர் கட்டண ரசீதுகளும் 2010 ம் ஆண்டுக்கு பிறகே கட்டப்பட்டுள்ளது என்றாலும், அதற்கு முந்தைய ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

3. வாதியின் கணவர் மோட்சைகண்ணு பருவக்குடி கிராமத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். வாதி தன் திருமணத்திற்கு பிறகு தன்னுடைய கணவர் கிராமமான பருவக்குடி கிராமத்தில் குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. வாதி எங்கள் கிராமத்தில் எங்கள்

வீட்டிற்கு கீழ்பக்கம் உள்ள வீட்டில் குடியிருந்து வந்தார். தற்போது கடந்த 3 மாதங்களுக்கு முன்பு வாதி தன் கணவர் கிராமமான பருவக்குடி கிராமத்திற்கு சென்றுவிட்டார். பிராது தபசிவல் சொத்தில் உள்ள 5 சென்டில் கீழ்புறம் உள்ள 2 1/2 சென்டில் வாதியின் தகப்பனார் பல ஆண்டுகளுக்கு முன்பே வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். நாங்கள் பிராது தபசில் சொத்து மேல்புறம் 2 1/2 சென்டில் நாங்கள் வீடு கட்டுவதற்கு முன்பே வாதியின் தகப்பனார் கீழ்புறம் 2 1/2 சென்டில் வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். 2007 ம் ஆண்டில் நானும், எனது தந்தையும் பிராது தபசில் சொத்தில் மேல்புறம் உள்ள 2 1/2 சென்டில் அத்துமீறி பிரவேசித்து வீடு கட்ட முயற்சித்ததால் வாதி எங்கள் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் சரியல்ல. 2007 ம் ஆண்டிலேயே பல தேதிகளில் வாதி காவல்நிலையத்திலும், வட்டாட்சியரிடமும் எங்களுக்கு எதிராக புகார் மனு கொடுத்திருந்தார் என்றால் சரிதான். எங்களை விசாரித்து பிறகு எங்கள் தரப்பில் ஆவணம் சரியாக உள்ளது என எங்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 2007 ம் ஆண்டில் வாதி தன்னுடைய கணவரின கிராமமான பருவக்குடி கிராமத்தில் குடியிருந்து வந்ததை பயன்படுத்தி நாங்கள் பிராது தபசில் சொத்தில் உள்ள மேல் புறம் 2 1/2 சென்டிற்கு மோசடியாக பட்டா மாற்றம் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல.

4. எங்கள் பெயரில் வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்யகோரி வாதி கொடுத்த மனுவில் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளும்படி உத்தரவிடப்பட்டது என்றால் சரியல்ல. பிராது தபசில் கண்ட 5 சென்ட் இடம் ஆதிதிராவிட நலத்துறையால் சங்கரனுக்கு வழங்கப்பட்ட இடம் என்றால் சரிதான். ஆதிதிராவிட நலத்துறையால் வழங்கப்படும் சொத்தை 30 ஆண்டுகளுக்கு விற்கவோ, வாங்கவோ கூடாது என நிபந்தனை உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு சொத்தை விற்கவோ வாங்கவோ கூடாது என

நிபந்தனையை பற்றி எனது தகப்பனாருக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது தந்தை கிரையம் வாங்கியதாக சொல்லும் கைத்தடி பத்திரத்தை எங்கு வைத்து யார் யார் முன்னிலையில் யாரால் எழுதப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். தலைவர் மாடசாமியும், ராசையா என்பவரும் பத்திரத்தில் சாட்சிக் கையெழுத்து போட்டார்கள். எனக்கு தற்போது 44 வயதாகிறது. கைத்தடி பத்திரம் எழுதப்பட்டதாக சொல்லும் விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், எனது தந்தை சொல்லித்தான் தெரியும் என்றாலும் சரிதான். இந்த வழக்கில் எனது தகப்பனாரை விசாரித்தால்தான் கைத்தடி பத்திரத்தை பற்றிய உண்மை விபரம் தெரியவரும் என்றால் சரிதான். வாதியின் இடத்தில் நாங்கள் அத்துமீறி வீடு கட்டியதாகவும், அதனை அகற்றி கொடுக்கவேண்டும் என்றும் வாதி எனக்கும், எனது தந்தைக்கும் பலமுறை வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல.. அதேபோல் நாங்கள் கட்டிய வீட்டிற்கு மின்இணைப்பு, குடிநீர் இணைப்பும் வழங்கக்கூடாது என வாதி ஆட்சேபனை தெரிவித்தார் என்றால் சரியல்ல. வாதி எங்களுக்கு அறிவிப்பு வழங்கினார் என்றாலும், அந்த அறிவிப்பிற்கு நாங்கள் வழக்கறிஞர் மூலம் பதிலறிவிப்பு வழங்கினோம் என்றாலும், அதனை மறைத்து தற்போது நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. சங்கரன் சொத்தை எங்களுக்கு கிரையம் கொடுத்ததாகத்தான் நாங்கள் பிராது தபசில் சொத்தில் உரிமை கோருகிறோம் என்றால் சரிதான். நாங்கள் பிராது தபசில் சொத்தில் அத்துமீறி வீடு கட்டிவிட்டோம் என்றாலும், அதனை அகற்றிக்கொடுக்க கடமைப்பட்டவர் என்றாலும் சரியல்ல. வாதியின் தந்தை என் தந்தைக்கு எந்த கைத்தடி பத்திரமும் எழுதிக் கொடுக்கவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக கைத்தடி பத்திரம் எழுதிக்கொடுத்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. பி.வா.சா.ஆ.1 , பி.வா.சா.ஆ-2 பட்டாக்கள் எவ்வித மூல ஆவணமும் இல்லாமல் ஏற்படுத்தப்பட்ட மோசடியான பட்டாக்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.5 செட்டில்மென்ட் பத்திரங்களை எனது தந்தை எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் எழுதிக் கொடுக்க எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 பொறியாளர் வரைபடத்தை 2007 ம் ஆண்டில்தான் நாங்கள் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். வாதி கோரியபடி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**